செ.வெ.எண்: 47 நாள்: 22.10.2016

# பத்திரிக்கைசெய்தி

## தற்காலிகபட்டாசுக் கடைகள் அமைக்கும் வணிகர்கள் வணிகவரித் துறையில் பதிவுசெய்யவேண்டியதுஅவசியம்-

## கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரிஆணையர் அறிவிப்பு

ஒவ்வொருவருடமும் வணிகர்கள் பல்வேறு இடங்களில் இருந்தும் பட்டாசுகொள்முதல் செய்துதற்காலிககடைகள் அமைத்துசில்லரைவிற்பனைசெய்வதுவழக்கமாகஉள்ளது. இவ்வாறுதற்காலிகமாகபட்டாசுவிற்பனைக் கடைகள் அமைக்கும் வணிகர்கள் தமிழ்நாடுமதிப்புக்கூட்டுவரிச் சட்டம்-2006 விதி38(3)(அ)-ன்கீழ் வணிகவரித்துறையில் பதிவுஎண் பெற்றபிறகேகொள்முதல் மற்றும் விற்பனைசெய்யவேண்டும். மேலும் பட்டாசுவிற்பனைசெய்யும் வணிகர்கள் தங்களதுபதிவுச்சான்றினைகடைகளில் பார்வைக்குவைக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

அனைத்துபட்டாசுவணிகர்களும் தங்களதுகொள்முதலுக்கானபட்டியல்கள் பெற்றிருக்கவேண்டும். மேலும் வணிகர்கள் தங்களதுவாடிக்கையாளர்களுக்குவிற்கப்படும் பட்டாசுகளுக்குபட்டியல்கள்வழங்கப்படவேண்டும்.கொள்முதல்மற்றும்விற்பனைகுறித்தவிபரங்களைதங்களதுவிற்பனைஇடம்அமைந்துள்ளஎல்லைக்குட்பட்டவரிவிதிப்புவட்டத்தில்தாக்கல் செய்துஅதற்குண்டானவரியைச் செலுத்தவேண்டும்.

வணிகர்களின்நலன் கருதிதற்காலிகமாகபதிவுச்சான்றுபெறஒவ்வொருமாவட்டதலைமைஅலுவலகங்களிலும் உதவிமையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனைபயன்படுத்திதற்காலிகபட்டாசுவிற்பனைசெய்யும் வணிகர்கள் உதவிமையங்களைஅணுகிநேரடியாகவிண்ணப்பம்செய்துபதிவுச் சான்றுபெற்றுகொள்ளஅறிவுறுத்தப்படுகிறது

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**